பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 10 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

**தலைப்புச் செய்திகள்**

1. தேசப்பிதா காந்தியடிகளின் பிறந்த நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

2. காந்தி ஜெயந்தியையொட்டி, நாடு முழுவதும் இன்று சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடைபெறுகின்றன.

3. **Fly Dubai** விமானத்தை பத்திரமாக தரையிறக்கி, **174** பேரை காப்பாற்றிய இந்தியாவை சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சாருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு கனடா துணை நிற்கும் என்று அந்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் திரு **Maninder Sindhu** கூறியுள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் வில்வித்தை **Recurve** குழு பிரிவில் இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 157-ஆவது பிறந்த நாளையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

புதுதில்லியில் உள்ள ராஜ்காட்டில் தேசப்பிதா காந்தியடிகள் சமாதியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்

அங்கு நடைபெற்ற சர்வ சமய அமைதி பிரார்த்தனையில் குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு மனோகர்லால், தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோரும் மலரஞ்சலி செலுத்தியபின் சர்வ சமய அமைதி பிரார்த்தனையில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள மகாத்மா காந்தி, லால் பகதூர் சாஸ்திரி சிலைகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு ஜெ பி நட்டா, திரு கிரண் ரிஜிஜு, திரு அர்ஜுன் ராம் மெக்வால், டாக்டர் ஜிதேந்திர சிங், டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பிஜேபி தலைவர் திரு நிதின் நபின், காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன் கார்கே, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு ராகுல்காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் பள்ளி மாணவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதனிடையே, காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் காமராஜர் நினைவு நாளையொட்டி தூத்துக்குடியில் இன்று கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்ற மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

மகளிருக்கான அதிகாரத்தை உறுதி செய்யும் வகையில், இது நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — லஷ்மணன் - 53 Sec. )*

<<<<<>>>>>

காந்தி ஜெயந்தியையொட்டி, நாடு முழுவதும் இன்று சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

''நடப்பாண்டுக்கான அனைவரின் முயற்சியில் - அனைவருக்கான வளர்ச்சி'' என்ற இயக்கம் இன்று தொடங்கப்படுவதாகவும் அமைச்சகம் அறிவித்துள்ளது.

கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்காக இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள், பஞ்சாயத்து அமைப்புகளை வலுப்பெறச் செய்வது மற்றும் கிராமப்புறங்களில் மக்களுக்கான சேவைகளை விரிவுபடுத்துவது உள்ளிட்ட நோக்கங்களுடன் கிராமச் சபை கூட்டங்கள் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் 122-ஆவது பிறந்த நாளும் இன்று கொண்டாடப்படுகிறது.

புதுதில்லியில் உள்ள விஜய்காட்டில் குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அப்போது பேசிய அவர், நாட்டின் வலிமைமிக்க தலைவராக விளங்கிய லால் பகதூர் சாஸ்திரி, பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதில் துடிப்புடன் செயல்பட்டவர் என்று கூறியுள்ளார்.

மனிதகுலத்தின் மேன்மைக்காகவும், ஒற்றுமைக்காகவும் பாடுபட்டவர் என்றும் நாட்டிற்காக கடுமையாக உழைத்தவர் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

லால் பகதூர் சாஸ்திரியின் தலைமைத்துவம் இந்தியாவின் பயணத்திற்கு வலுசேர்த்ததாகவும் அவர் கூறினார்.

ஜெய் ஜவான் - ஜெய் கிசான் என்ற முழக்கத்தை மக்களிடையே எடுத்துச்சென்று நாட்டை காக்கும் வீரர்கள் மற்றும் மக்களுக்கான உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் பெருமையையும் எடுத்துக்காட்டியவர் லால் பகதூர் சாஸ்திரி என்று அவர் குறிப்பிட்டார்.

எளிமையாகவும், மனஉறுதியுடனும் செயல்பட்டு நாட்டிற்காக அவர் அரும்பாடுபட்டவர் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், எளிமையான வாழ்க்கை மற்றும் நாட்டிற்கான அர்ப்பணிப்பு மற்றும் உறுதியான மனப்பான்மையுடன் செயல்பட்டவர் லால் பகதூர் சாஸ்திரி என்று கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாளையொட்டி, அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாடு சவாலான சூழ்நிலைகளை சந்தித்த போதும், மிகுந்த உறுதிபாட்டுடன் தீர்வுகண்டவர் லால் பகதூர் சாஸ்திரி என்று தெரிவித்துள்ளார்.

ஜெய் ஜவான் — ஜெய் கிசான் என்ற முழக்கத்தை மக்களிடையே எடுத்துச்சென்றவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

எளிமையான வாழ்க்கை, அர்ப்பணிப்பு உணர்வோடு கடமையாற்றுதல், நாட்டிற்கான சேவை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து மக்களுக்காகவே வாழ்ந்தவர் லால் பகதூர் சாஸ்திரி என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

முதுபெரும் அரசியல் தலைவர் காமராஜரின் நினைவு நாளையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், தமது மாளிகையில் அன்னாருக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பெருந்தலைவர் காமராஜர் தமது வாழ்க்கையை நாட்டுக்காகவும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்கும் அர்ப்பணித்துக் கொண்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்ற மாற்றத்தை கொண்டுவர அவர் அரும்பாடுபட்டவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தன்னலம் கருதாமல் அர்ப்பணிப்பு உணர்வோடு மக்கள் நலனுக்காக பாடுபட்ட காமராஜரை வருங்கால சந்ததியினர் நினைவில் வைத்துக்கொள்வார்கள் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

**Fly Dubai** விமானத்தை வெடிக்கச் செய்ய துணை விமான மேற்கொண்ட முயற்சியை முறியடித்த இந்தியாவை சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சாருக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, தமது சமூக வலைதள பதிவில் காணொலி வெளியிட்டு பேசியுள்ள பிரதமர், கேப்டன் ஸ்மித் மச்சார், மிகுந்த மன தைரியத்துடன் இந்த மாபெரும் சவாலை எதிர்கொண்டு, பயணிகளை காப்பாற்றியுள்ளார் என்று பாராட்டியுள்ளார்.

தமது உயிரை துச்சமென மதித்து, தீரம்மிக்க இந்த செயலை செய்து, மிகப்பெரிய துயர சம்பவத்தை தடுத்து நிறுத்தியுள்ளதற்கு **140** கோடி இந்திய மக்களும் தலைவணங்குவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு கனடா துணை நிற்கும் என்று அந்நாட்டு வர்த்தகத்துறை அமைச்சர் திரு **Maninder Sindhu** கூறியுள்ளார்.

**Milwaukee**-ல் நடைபெறும் ஜி-**20** நாடுகளின் வர்த்தக அமைச்சர்கள் கூட்டத்தையொட்டி செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

எரிசக்தி, அரிய கனிம வளங்கள், ஏரோ ஸ்பேஸ் உள்ளிட்ட துறைகளில் இந்தியாவுடன் இணைந்து செயலாற்ற கனடா ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

எரிசக்தி தேவை, விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இரு நாடுகளுக்கும் வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கியிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியா — கனடா இடையிலான இருதரப்பு வர்த்தகம் 30 பில்லியன் டாலரிலிருந்து. 70 பில்லியன் டாலராக உயர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா — கனடா இடையிலான ஒட்டுமொத்த பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த ஐந்தாவது சுற்று பேச்சுவார்த்தைகள் ஒட்டாவா நகரில் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே முதலீடு, ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளிலும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கனடாவில் கனிம வளம் மற்றும் எரிசக்தித் துறைகளில் இந்திய முதலீடுகளை அதிக அளவில் வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களில் கனடா நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளதாகவும் அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு **Maninder Sindhu** தெரிவித்தார்.

<<<<<>>>>>

லடாக் யூனியன் பிரதேசத்தில் உள்ள 28 இடங்களை அடையாளம் காண்பதற்கு ஏதுவாக அவற்றிற்கு பெயர் சூட்டுவதற்கான நடவடிக்கைகளை உள்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

இந்திய நில அளவை கணக்கீட்டு வரைபடத்தின் அடிப்படையில் லடாக் அரசுடன் கலந்தாலோசித்து இந்த இடங்களுக்கு பெயர் சூட்டப்பட்டு வருகிறது.

இந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவர்களின் வாழ்க்கை முறை பூலோக கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் வில்வித்தை ரிக்கர்வ் குழு பிரிவில் இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளின், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளது.

மகளிர் குத்துச்சண்டை 75 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் லவ்லினா தங்கப்பதக்கம் வென்றார்.

**<<<<<END>>>>>>**